**ஏப்ரல் – 06**

# தமிழ்நாடு செய்திகள்

## விரிவான சுற்றுச்சூழல் மாசுபாட்டுக் குறியீடு (CEPI)

- மூலம், வழித்தடம் மற்றும் ஏற்பிகளின் வழிமுறைகளை (அல்காரிதம்களை) பின்பற்றி ஒரு குறிப்பிட்ட இடத்தில் சுற்றுச்சூழலின் தரத்தினை வகைப்படுத்துவதற்கான ஒரு பகுத்தறியும் குறியீடாக விரிவான சுற்றுச்சூழல் மாசுபாட்டுக் குறியீடு (Comprehensive Environmental Pollution Index – CEPI) உள்ளது.
- CEPI குறியீட்டில் ஏற்படும் மதிப்பின் அதிகரிப்பு சுற்றுச்சூழல் மீதான மோசமான விளைவுகளைக் குறிக்கிறது.
- டெல்லியில் அமைந்துள்ள அறிவியல் மற்றும் சுற்றுச்சூழல் மையம் (CSE) தமிழ்நாட்டின் CEPI மதிப்பு பற்றிய மதிப்பீட்டினை செய்துள்ளது.
- தமிழ்நாட்டின் தொழிற்சாலைப் பகுதிகளில் நிலத்தடி நீர் மிகவும் மாசடைந்துள்ளது.
- வேலூர் மாவட்டம் மிகவும் மாசடைந்துள்ள ஆறுகளைக் கொண்டதாக உள்ளது.
- 2018 ஆம் ஆண்டு CEPI நீரின் மதிப்பின் படி, தமிழ்நாட்டிலுள்ள ஐந்து தொழிற்சாலைப் பகுதிகள் தண்ணீருக்கான மதிப்பில் 50க்கும் மேல் கொண்டுள்ளன.
- இவற்றுள்,
    - வேலூர் – வட ஆற்காடு, மணலி மற்றும் திருப்பத்தூர் ஆகியவை "மிகவும் மாசடைந்துள்ள பகுதிகள்" – 60 மற்றும் அதற்கும் மேற்பட்ட CEPI மதிப்பினைக் கொண்டுள்ளன.
    - கடலூர் மற்றும் கோயம்புத்தூர் ஆகியவை "மோசமாக பாதிக்கப்பட்ட பகுதிகள்" – 50 மற்றும் 60க்கு இடைப்பட்ட CEPI மதிப்பை கொண்டுள்ளன.
- தோல் பதனிடும் தொழிற்சாலையிலிருந்து வரும் கழிவுநீர் மற்றும் மாசுபடுத்திகளான கால்சியம், குளோரைடு மற்றும் இரும்பு ஆகியவை நிலத்தடி நீருக்கு மிகவும் மோசமான அச்சுறுத்தலாக உள்ளன.

# சர்வதேசச் செய்திகள்

## உலக நோய்த்தடுப்பு மற்றும் தளவாடங்கள் உச்சி மாநாடு 2021

- HOPE கூட்டமைப்பின் முதல் உலக நோய்த் தடுப்பு மற்றும் தளவாடங்கள் உச்சி மாநாடு ஐக்கிய அரபு அமீரகத்திலுள்ள அபுதாபியில் நடைபெற்றது.
- மத்திய சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சரான டாக்டர் ஹர்ஷவர்தன் காணொலி மூலம் இந்த மாநாட்டில் பங்கேற்றார்.
- இம்மாநாட்டில் "ஆசியா மீது கவனம் செலுத்துதல் : ஆசியா முழுவதும் தடுப்பூசி உற்பத்தி மற்றும் பங்கீடு" பற்றி விவாதிக்கப்பட்டது.
- டாக்டர் ஹர்ஷவர்தன் இந்தியாவின் தடுப்பூசி நிர்வாகத் திட்டம் பற்றியும் கோவிசீல்டு மற்றும் கோவாக்சின் எனப்படும் இரண்டு இந்தியத் தடுப்பூசிகளின் உருவாக்கம் பற்றியும் இம்மாநாட்டில் குறிப்பிட்டு உரையாற்றினார்.
- 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 முதல் 45 (அ) அதற்கு மேற்பட்ட வயதுள்ள அனைத்துக் குடிமக்களும் தடுப்பூசி போட்டுக் கொள்வதற்கு அனுமதி வழங்குவதற்கான சமீபத்திய முடிவினையும் அவர் குறிப்பிட்டார்.

- HOPE கூட்டமைவு ஐக்கிய அரபு அமீரகத்திலுள்ள முன்னணித் தொழிற்சாலை நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டுள்ள ஒரு பொது - தனியார் கூட்டாண்மை ஆகும்.
- தடுப்பூசியின் உலகளாவியப் பங்கீட்டிற்காக இந்தக் கூட்டமைவு இணைந்து செயல்படுவதற்கு உறுதி பூண்டுள்ளது.

# பொருளாதாரச் செய்திகள்

## காசியாபாத் நகர் நிகாம் – மும்பை பங்கு வர்த்தகம்


- காசியாபாத் நகர் நிகாமானது BSE பங்குச் சந்தையில் தன்னைப் பதிவு செய்து கொண்டு உள்ளது
- மும்பை பங்கு வர்த்தகத்தின் (Bombay Stock Exchange – BSE) பத்திரத்தைப் பயன்படுத்தி தனியார் பங்குகளின் அடிப்படையில் நகராட்சிப் பத்திரங்களை வழங்கி ரூ.150 கோடி வரை காசியாபாத் நகர் நிகாம் நிதி திரட்டியுள்ளது.
- நாட்டில் நகராட்சிக் கழகத்தால் வழங்கப்பட்ட முதல் பசுமைப் பத்திரம் இதுவாகும்.
- இந்தத் தொகையானது காசியாபாத்திலுள்ள இந்திரபுரத்தில் மூன்றாம் நிலை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப் பயன்படுத்தப்படும்.
- ரூ.240 கோடி மதிப்பிலான இத்திட்டத்திற்கு நிதியளிக்க இத்தொகை பயன்படுத்தப் படும்.
- இந்தச் சுத்திகரிப்பு நிலையங்கள், சுத்திகரிக்கப்பட்ட நீரைத் தொழிற்சாலைகளில் மீண்டும் உபயோகிக்க வழிவகை செய்யும்.
- உத்தரப் பிரதேச மாநிலத்தில், நிதி திரட்டிய இரண்டாவது நகராட்சிக் கழகம் காசியாபாத் நகர் நிகாமாகும்.
- இதற்கு முன்பு லக்னோ நகராட்சி கழகமானது BSE பங்குச் சந்தையில் தன்னைப் பதிவு செய்துள்ளது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## LHC


- ஸ்விட்சர்லாந்திலுள்ள லார்ஜ் ஹாட்ரன் கொலைடரில் (Large Hadron Collider – LHC) உள்ள இயற்பியலாளர்கள் இயற்கையின் ஒரு புதிய விசையைக் கண்டுபிடித்துள்ளனர்.
- LHC என்பது உலகின் மிகப்பெரிய மற்றும் அணுத்துகள்களை அதிவேகத்தில் முடுக்கி விடும் உலகின் மிகவும் சக்தி வாய்ந்த ஒரு ஆய்வுக் கூடமாகும்.
- இது ஐரோப்பிய அணுசக்தி ஆராய்ச்சி மன்றத்தின் (CERN – European Council for Nuclear Research's) வளாகத்தில் அமைந்துள்ளது.
- இது 2008 ஆம் ஆண்டு செப்டம்பர் 10 ஆம் தேதியன்று முதன்முதலில் ஆரம்பிக்கப் பட்டது.
- இது அணுத் துகள்களை அதன் பாதையின் ஊடாக அதன் ஆற்றலை அதிகரிக்கச் செய்வதற்கு வேண்டி அவற்றை முடுக்கி விடுவதற்காக 27 கி.மீ. தொலைவிற்கு மீக்கடத்தி காந்த வளையங்களுடன் கூடிய ஒரு அமைப்பைக் கொண்டுள்ளது.
- இது புரோட்டான் – புரோட்டான் என்ற ஒரு மோதலை ஏற்படுத்தும் வகையில் வடிவமைக்கப் பட்டுள்ளது.

- இந்த முடுக்கிகளின் உள்ளே, அவற்றை மோதச் செய்வதற்கு முன்னால் ஒளியின் வேகத்திற்கு இணையான இரு உயர் ஆற்றல் துகள் ஒளிக்கற்றைகள் செல்லும்.
- அதி உயர் வெற்றிடத்தில் வைக்கப்பட்ட இரு தனித்தனி ஒளிக்கற்றைக் குழாய்களின் ஊடாக இந்த ஒளிக்கற்றைகள் எதிரெதிர் திசையில் பயணிக்கும்.
- மீக்கடத்தி மின்காந்தங்கள் வழி நடத்தும் வலுவான காந்தப் புலத்தினால் இவை முடுக்கி வளையங்களைச் சுற்றி இயக்கப் படுகின்றன.



# சுற்றுச்சூழல் செய்திகள்

## பாரம்பரியப் பல்லுயிர்ப் பெருக்கத் தளம் – மகாராஷ்டிரா



**A GREEN LEGACY**

A look at the declared and proposed biodiversity heritage sites in the state

GLORY OF ALLAPALLI, Gadchiroli
**Status:** Declared (2014)
**Area:** 6 hectares
**Reason:** It is being preserved as natural forest having biological and historical value

VELAS BEACH, Ratnagiri district
**Status:** Proposed (2017)
**Area:** 0.98 hectares (2.44 acres)
**Reason:** The area has been officially declared as turtle nesting site along the west coast. Velas saw 750 Olive Ridley turtle hatchlings in 2017

PHOTOS: STATE FOREST DEPARTMENT

ANJARLE BEACH, Ratnagiri district (in pic above)
**Status:** Proposed (2017)
**Area:** 0.74 hectare
**Reason:** Another turtle nesting site that saw 400 Olive Ridley turtle hatchlings across six nesting sites in 2017, Anjarle has a number of species of birds, marine mammals, coastal invertebrates and mangroves.

GANESHKIND GARDEN, on the campus of National Agricultural Research project of the Mahatma Phule Krishi Vidyapeeth, Pune
**Status:** Proposed (2017)
**Area:** 58.67 hectares
**Reason:** This botanical garden was formally started in 1873 by GM Woodrow of the East India Company. History has it that the Peshwas planted the first mango tree (hapus), which still exists, at this garden.

LANDORKHORI RESERVE FOREST, around Chhatrapati Shivaji Park in Jalgaon
**Status:** Proposed (2018)
**Area:** 266 hectares
**Reason:** It is a reserved forest with 190 species of birds and 24 species of mammals

WARDHAM IN SIRONCHA, Gadchiroli
**Status:** Proposed (2018)
**Area:** 8 hectares
**Reason:** Home to at least 150-million-year-old fossils

(Source: Maharashtra state biodiversity board)

- மகாராஷ்டிர மாநில அரசானது சிந்துதுர்க் மாவட்டத்திலுள்ள மேற்குத் தொடர்ச்சி மலையில் அம்போலி எனும் பகுதியைப் பல்லுயிர்ப் பெருக்க பாரம்பரியத் தளமாக அறிவித்து உள்ளது.
- அரிதான நன்னீர் மீன் இனங்கள் இங்கு கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.
- ஸ்கிஸ்துரா ஹிரண்யகேஷி (Schistura Hiranyakeshi) எனப் பெயரிடப்பட்ட ஒரு புதிய நன்னீர் மீன் இனத்தினை தேஜாஸ் தாக்கரே மற்றும் அவரது குழு கண்டுபிடித்துள்ளது.

- தேஜாஸ் தாக்கரே முதலமைச்சர் உத்தவ் தாக்கரேயின் மகனாவார்.
- இந்த மீன்கள் சிந்துதுர்க் மாவட்டத்தின் சவந்த்வாடி தாலுக்காவிலுள்ள அம்போலியின் அருகே காணப் படுகின்றன.
- ஸ்கிஸ்துரா மீன் ஆக்சிஜன் நிறைந்த நீர்நிலைகள் மற்றும் ஓடைகளில் வாழும் ஒரு சிறிய வண்ண மயமான மீனாகும்.
- இதற்கு முன்பு அந்த மாநில அரசு,
    - அல்லப்பள்ளியின் மகிமை – கட்சிரோலி மாவட்டம்
    - லன்டோர் கோரி பூங்கா – ஜல்காவோன்
    - கணேஷ் கிந்த் – பூனா
    - மைரிஸ்டிகா சதுப்புநிலத் தாவரங்கள் – சிந்துதுர்க் மாவட்டம்

ஆகியவற்றைப் பாரம்பரிய பல்லுயிர்ப் பெருக்கத் தளங்களாக அறிவித்துள்ளது.

### பாதுகாக்கப்பட்ட ஈரநிலங்கள்

- ஸ்ரீ நகரிலுள்ள தால் ஏரி மற்றும் ஜம்மு & காஷ்மீரில் உள்ள இதர ஐந்து ஏரிகள், பாதுகாக்கப்பட்ட ஈரநிலங்களாக அறிவிக்கப்பட உள்ளன.
- காஷ்மீர் பகுதியிலுள்ள வுலார், தால், நைகீன் ஏரி ஆகியவை மற்றும் ஜம்மு பகுதியிலுள்ள சனாசர், மனாஸ்பல் மற்றும் பூர்மண்டல் ஏரி ஆகியவை பாதுகாக்கப்பட்ட ஈரநிலங்களாக அறிவிக்கப்பட்டு இருக்கின்றன.
- பூர்மண்டல் ஏரி சோட்டா காசி எனவும் அழைக்கப்படுகிறது.
- ஜம்மு & காஷ்மீர் தலைமைச் செயலாளர் தலைமையிலமைந்த ஜம்மு & காஷ்மீர் ஈரநில ஆணையத்தின் சந்திப்பின் போது இம்முடிவானது மேற்கொள்ளப்பட்டது.
- ஜம்மு & காஷ்மீரில் வெவ்வேறு ஈரநிலங்களைப் பற்றிய தகவல்களை சேகரித்து,
    - சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டம், 1986 மற்றும்
    - ஈரநிலம் (பாதுகாப்பு & மேலாண்மை) விதிகள் ஆகியவற்றின் கீழ்

  அவற்றைக் கொண்டு வருவதற்கான ஒரு பரிந்துரையை வழங்குமாறு அதன் தலைமைச் செயலாளர் அதன் வனத்துறைக்கு ஆணையிட்டு உள்ளார்.
- அம்மாநில வனத்துறையானது ஈரநிலங்கள் பற்றிய புவிசார்ந்த தரவுகளின் டிஜிட்டல் விவரங்களைத் தயாரித்தல், ஆவணப்படுத்துதல் மற்றும் உருவாக்குதல் போன்றவற்றிற்கான ஒரு முதன்மை துறையாகும்.

## மாநிலச் செய்திகள்

### பெண்களுக்கான இலவசப் பேருந்து வசதி

- ஏப்ரல் 01 முதல் பஞ்சாப் மாநிலத்தில் அந்த மாநில அரசால் இயக்கப்படும் பேருந்துகளில் பெண்கள் இலவசமாகப் பயணம் செய்யலாம்.
- அதன் மாநில முதலமைச்சர் அமரீந்தர் சிங் தலைமையிலான மாநில அமைச்சரவை இத்திட்டத்திற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.
- இத்திட்டமானது, அம்மாநிலத்தைச் சேர்ந்த சுமார் 1.31 கோடி பெண்களுக்குப் பயன் அளிக்கும்.
- 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, பஞ்சாப்பின் மக்கள்தொகை

2.77 கோடியாகும் (1,46,39,465 – ஆண்கள் மற்றும் 1,31,03,873 – பெண்கள்).

# இதரச் செய்திகள்

## மல்லிகா சீனிவாசன் – PESB வாரியத்தின் தலைவர்

- நியமனங்களுக்கான அமைச்சரவைக் குழுவானது பத்மஸ்ரீ மல்லிகா சீனிவாசனை பொதுத் துறை நிறுவனங்கள் தேர்வு வாரியத்தின் (Public enterprises Selection Board - PESB) தலைவராக நியமிப்பதற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.
- இவர் டிராக்டர்கள் மற்றும் வேளாண் கருவிகள் (TAFE - Tractors and Farm Equipment)) நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் ஆவார்.
- TAFE நிறுவனமானது இந்திய அளவில் 2வது மற்றும் உலகின் மூன்றாவது அளவில் டிராக்டர்களை உற்பத்தி செய்யும் ஒரு பெரிய நிறுவனமாகும்.
- மத்திய பொதுத்துறை நிறுவனங்களில் (CPSEs) உயர்நிர்வாகப் பதவிகளை நியமிக்கும் பொறுப்பு பொது நிறுவனங்கள் தேர்வு வாரியத்திடம் உள்ளது.

*குறிப்பு*

- PESB வாரியத்தின் தலைவராக ஒரு தனியார் துறை நிபுணர் நியமிக்கப்படுவது இதுவே முதன்முறையாகும்.
- இவர் PESB வாரியத்தின் தலைவராக மூன்று ஆண்டுகளுக்கு அல்லது 65 வயது எட்டும் வரை அந்தப் பதவியிலிருப்பார்.
- இதற்கு முன்னாள் அப்பதவியிலிருந்த முன்னாள் நிதிச் செயலாளர் ராஜீவ் குமாருக்குப் பிறகு இவர் இப்பொறுப்பினை ஏற்றுள்ளார்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★